Gnanalayam - The Wisdom Temple
(a unit of Light Bridge Foundation)

No: 27, Jeeva Street, Muthirayarpalayam, Pondicherry 605009, INDIA

**ஓம் ஈஸ்வராய நமஹ!**

# ஞானாலயத்தில் எட்டாம் வட்டத்தில் ஆன்ம விடுதலை அடைய காத்திருந்த ஆத்மாக்களுக்கு (503 பேர் ) அகத்தியர் மகரிஷிகள் ஆற்றிய அற்புத உரை.

**8ஆம் வட்டம் ஆன்ம விடுதலை நடைப்பெற்ற நாள்: 06 May 2020**

**எமதாசன் ஆறுமுகனாரின் அடிதொழுதே உரைக்கின்றோம்.**

கண் இமைகள் திறவுகொண்டால்
காட்சிகளும் புலப்படுமாம்
காருண்யம் திறவு கொண்டால்
கதிரொலிளியும் புலப்படுமாம்
வேதங்கள் திறவு கொண்டால்
மறை பொருளும் புலப்படுமாம்
ஈசனும் திறவு கொண்டால்
ஆன்ம விடுதலையும் புலப்படுமாம்
சத்தியங்கள் நிலைத்திருக்க
நித்திய ஒளி பெருகி நிற்க
மத்தியிலே எழுச்சியுறும்
சக்தியினைப் பற்றிடுவாய்

உயிராகிய சிவனாரும் ஒற்றை அணுவாம் உமையவளும் அகத்தில் ஒன்றெனவே கலப்புற்றால் உன்னதங்கள் உயர்ந்திடுமாம், ஈசத்துளியாம் ஆன்மாவும், ஆதிசக்தியாம் ஒற்றை அணுவும் இணைந்தே புறத்தில் கலப்புற்றால் பிறவா பெருநிலை கிட்டிடுமாம்.

அகமும் புறமும் சமனமுற்றால் ஆன்மா விடுதலை கண்டிடுமாம், உடலும் உயிரும் சமனமுற்றால் மேன்மை நிலைகள் உதித்திடுமாம். உயரிய சமநிலை எய்திடவே, அருஉருவாய் இணைந்திட்ட குரு வேண்டும். கலியுலகினில் ஆன்மா விடுதலை கண்டிட சத்தியம் உணர்த்திடும் குரு வேண்டும்.

Copyright © 2020 Gnanalayam

பற்றிடும் ஊன்றுகோள் பதமுற நிலைத்திட்டால் பாகற்கொடியும் கனிதருமாம், நித்தியம் அநித்தியம் உணர்ந்திட்ட குருவினால் ஆன்மாக்கள் பலவும் பதமுறுமாம். ஈசனின் தாளினைப் பற்றிடவே ஆதிசக்தியின் துணை வேண்டும். ஆதிசக்கியின் அருள் பெறவே உயிரினை உணர்த்திடும் குரு வேண்டும். பதமுற உதவிடும் குருவினை பணிந்தால் முக்தியும் மோட்சமும் இனிதாய் கிட்டும், சத்தியயுகம் தனில் கரும்பாய் இனித்திட முத்திரைப் பதிப்பாய் மானுடனே. கலியினை அழிப்பாய், ஆன்ம ஒளிதனை வளர்ப்பாய், பற்றுகளைத் துறப்பாய், பரவெளியாய் நிலைப்பாய். பக்திகொண்டு பணிந்துவிட்டால் கலிவாழ்வும் சுகமாகும். ஆன்மாவின் உயர்நிலை கண்டே மானுட நிலையும் உயர்வடையும்.

கற்பதும் பயில்வதும் கரைகண்டால் கற்சிலை கூட வாழ்ந்திருக்கும், கற்றவையும் பயின்றவையும் ஒன்றிணைந்தால் கற்பகத் தருவும் மகிழ்ந்திருக்கும்.

**கலியுலக எல்லைதனில் வாழ்கின்ற மானுடர்களே! ஒவ்வொரு ஆன்மாவோடும் இணைந்தே வசித்திடும் அகத்தீசன் உரைக்கின்றோம்.**

புவி எனும் இல்லம் புணரமைப்பு காண்பது சதுர்யுகங்களின் எல்லைக் காலத்தினிலே எனும் காரணத்தால் ஈசனின் இல்லத்தினைச் சரண் புகுந்திடல் வேண்டும் என்றே கோருகின்றோம். பல்வேறு துன்ப நிலைகளை அனுதினமும் ஏற்று நின்றால் புவி வாழ்வு சிறக்காது. இன்ப நிலைகளாம், பேரானந்த நிலைகளை எய்திட ஈச உலகமே உகந்ததாகும்.

ஞானத்தின் ஆலயமே ஈசனை அடையும் அகமார்க்கமாகும், குருவாய் நிலைத்துச் செயல்புரியும் எமது மகளாரே அகமார்க்கம்தனை இணைத்திடும் புறமார்க்கமாகும். கலியின் எல்லைக் காலம்தனில் புவிக்கோளானது வீரியமாய்ச் சுழன்று வருகின்றது. சுழற்சியினைத் தவிர்த்திட்டு ஓய்வினை ஏற்றுவிடவும் முனைகின்றது. யுக மாற்றம் என்பது புவிக்கோளின் வாழ்வினில் உருவாகும் நிலைமாற்றங்கள் ஆகும். சதுர்யுக எல்லையில் உருவாகும் கலியுகத்தின் நிறைவு

என்கின்ற நிலை மாற்றமே புவியின் வீரியமான இயக்கமாகும். இதனைத் தொடந்து நிர்மலமான ஒய்வினை ஏற்றுவிட புவிக்கோள் காத்துள்ளது.

ஈசனின் வருகையானது நிகழ்ந்திட்டால் சத்திய யுகமும் மலர்ந்துவிடும். புவியின் இயக்கமும் தொடர்ந்திட வேண்டுமெனில் வித்துக்கள் விதைகளாய் நிலை கொண்டிடல் வேண்டும். நிலத்தினில் பயிரிட விதைகள் உதவிடும், புவி எனும் நிலக்கோளின் இயக்கதிற்கு ஆன்ம விதைகளே உதவிட இயலும்.

1. சத்யயுக வித்துக்கள் என்றால் என்ன?
2. ஆன்ம விடுதலை என்றால் என்ன?
3. ஞானாலயத்தின் மையத்திலிருந்து இயங்கிடும் உயர் ஆற்றல்களின் பணி யாது?
4. இணைத்திடும் பாலமாம் எமது மகளாரான குருவின் நிலை யாது?

இவ்வினாக்களுக்கு தீர்க்கமாய் விடை அறிந்து கொண்டால் சத்யயுக வித்துக்களாய் தேர்வுற்ற நிலை உணர்ந்து ஆனந்தம் பெருகிடும்.

### 1. சத்ய யுக வித்துக்கள் என்றால் என்ன?

பயிர் தொழிலினை மேற்கொண்டுள்ள மானுடர்கள் நன்கு அறிந்திருப்பர். பயிர்த் தொழிலின் மூலாதாரம் விதைகள் என்கின்ற வித்துக்களேயாகும். நிலமாகிய மண்பரப்பினில் உயரிய விதைகள் யாவும் விதைக்கப்பட்டால் மாத்திரமே இயக்கம் மலர்ந்திடும், பயிர்களும் செழித்து வளர்ந்திடும். விளைச்சல் வீரியமாய் நிகழ்ந்திட்டால் மானுடர்களின் பசிப்பிணியும் நீங்கிவிடும். அவ்வகையிலேயே நிலமாகிய புவிக்கோளின் இயக்கத்திற்கும், சுழற்சிக்கும் நல்வித்துக்கள் எனும் ஆன்ம விதைகள் அவசியமாகும். ஒவ்வொரு யுக மாற்றத்தின் தருணத்திலும் அகத்தீசனாகிய யாமே முழுமையான பொறுப்பினை ஏற்று ஈசுனுக்கும், ஆதிசக்தியான பூமிக்கும் உதவிகள் புரிந்திடுவோம். எமக்கு உதவிட உயர் ஆன்மாக்களும் இணைந்திடுவர், மானுட ஆன்மாக்களும் இணைந்தே செயல்புரிவர்.

கலியின் எல்லைக்காலம் நெருங்கிட்ட இத்தருணத்தில் மானுடர்களின் சிரசு என்கின்ற ஆன்மாவின் வசிப்பிடமான தலைப்பகுதியிலே அமிலக்கழிவுகள் எனும் நஞ்சுகள் அதிகரித்துள்ளன. அணுக்களின் நச்சுக் கழிவுகளை அழித்திடும் மார்க்கமறியாத காரணத்தினால் நஞ்சுகளையே எரிபொருளாக ஏற்று மானுட குலம் இயங்குகின்றது. சிந்தனைகளும் செயல்களும் தீயவையாக மாற்றமடைந்துவிட்டன. பிற ஆன்மாக்களுக்கு துன்பம் விளைவித்திடவே முனைகின்றனர்.

மானுடர்கள் ஆன்ம விடுதலை கண்டால் ஈச உலகினில் வாழ்ந்திருக்கலாம், இயலாவிடில் நஞ்சினால் சூழப்பட்டு புவிக்கோளினிலே நிலைத்துவிடும். மேலும் புணரமைப்பு நிகழ்கின்ற தருணத்தில் புவிக்கோளானது தனது இயக்கதினை தளர்த்திடும் காரணத்தால் ஆன்மாக்கள் நிலமதிலே வீழ்ச்சியுற்று செயலிழக்கும். ஆன்மத்துகள்களால் விண்ணேறிட இயலாது என்றுணர்க. பயிர்களின் வளர்ச்சிக்கு நல்ல விதைகளே உதவிடும். புவிக்கோளின் இயக்கத்திற்கும் நல்ல ஆன்மாக்களே உதவிடும்.

மலரவுள்ள சத்திய யுகம்தனில் நல்லியக்கம்தனை உருவாக்கிட சேரிக்கப்படும் உயரிய வித்துக்களே வட்ட மலர்களாய் மலர்ச்சியுற இயலும். பல்வேறு பிறவிகள் மேற்கொண்டு தவிப்புறும் ஆன்மாவினை விடுவித்திடவே முயன்றிடல் வேண்டும். அணுக்களின் அமிலக்கழிவுகள் பெருகியுள்ள நிலையில் சுயமுயற்சிகள் எளிதாய் பயனளித்திடாது. யுக மாற்றப் பணினை ஏற்றே புவியிறங்கி செயல்புரியும் எமதாற்றல்களைக் கொண்டே ஆன்மாக்கள் எளிதாய் விடுபட இயலும். ஆன்ம விடுதலையினை குருவின் துணை கொண்டு ஏற்றிடுவேன் என்றே பணிவுடன் ஏற்றிட்டால் சத்யயுகத்தில் ஓர் அற்புத வாழ்வினைப் பெற்றிடலாம். நிறைவாக ஓர் விண்மீனாகவும் நிலைத்திடலாம்.

## 2. ஆன்ம விடுதலை என்றால் என்ன?

சப்தரிஷிகளாய் இணைந்து, புவியினை அடைந்து, ஞானத்தின் ஆலயமாம் மையப்பகுதியினை அடைந்து, ஆன்ம விடுதலைதனை குருவான மகளாருடன் இணைந்து நல்கிடும் நிலைதனை ஒவ்வொரு மானுட ஆன்மாக்களும் உணரவேண்டும். ஒவ்வொரு யுகமாற்றமும் போரினைக் கொண்டே நிகழ்ந்தேறிடும். கலியினை முறியடித்து சத்ய யுகத்தினை நிலைநாட்டிட இயற்கைக்கும் செயற்கைக்கும் பெரும் போர் நிகழத்துவங்கியுள்ளது.

செயற்கை வளங்களிலே மூழ்கி இன்புற்று வாழ்ந்திட்ட ஆன்மாக்கள் இயற்கையின் போராட்டத்தில் அழிவுறும் என்றுணர்க. ஆன்மாவானது விடுதலைதனை ஏற்றால் மாத்திரமே கலிப்போரினில் அழிவுறாது காக்கப்படும். சுயத்தினை உணர்ந்து, சுய ஆற்றல்களைக் கொண்டு ஆன்மாவானது விடுதலையுற வேண்டும் என்பதே நியதியாகும். எனினும் எமது சுய ஆற்றல்களை நல்கியே யாம் ஆன்ம விடுதலைதனை நல்கிட முயல்கின்றோம். கலியினிலே சிக்குண்ட ஆன்மாக்கள் முக்திநிலைதனை எய்திடவே யாம் உதவுகின்றோம்.

கலியினை எதிர்த்தே நிகழ்கின்ற யுத்தம்தனிலே விடுதலை அடைந்து விண்மீனாய் நிலைக்கின்ற ஒவ்வொரு விடுதலை அடைந்த ஆன்மாவும் உயர் ஆன்மாவாய் எம்மோடு இணைந்து செயல்புரிகின்றனர். யுகமாற்றத்திற்கான தலைமையினை ஏற்றுள்ள யாம் ஆற்றும் பணி யாது என்றறிக.

குருவாய் செயல்புரியும் எமது மகளாரே உயரிய இடைப்பாலமாவார். அருவாய் ஜோதியிலே கலப்புற்று யாம் உருகொண்டே நிலைத்திட்ட குருவான மகளாரை முழுமையாக ஆட்கொண்டுள்ளோம். எம்மையே சத்குருவாக ஏற்றுவிட்ட காரணத்தினால் ஆற்றல்களினால் கலப்பு கொண்டே செயல்புரிகின்றோம். குருவான மகளாரோடு ஒளியிழைகளால் தொடர்பு கொண்டே செயல்புரிகின்றோம்.

குருவினிடமிருந்து தீட்சைகளை ஏற்று, சிரசின் அமிலக்கழிவுகள் என்கின்ற திரைகளை நீக்கி, மறைபொருளான ஆன்மாவினை உணர்ந்திட்ட வட்ட மலர்களே! அகத்தீசன் உரைப்பதனை ஈச வாக்காக ஏற்றிடுங்கள். ஒவ்வொருவரின் சிரசினிலும் யாம் நர்த்தனங்கள் புரிகின்றோம். ஒருமுறையேனும் குருவினை பணிவோர் யாவரும் உயரிய ஒளியிழையால் இணைக்கப்படுவர். ஜோதியில் கலப்புற்றுள்ள யாம் ஒளியிழைகளால் குருவான மகளாரோடு தொடர்பு கொண்டு அதன் மூலம் விடுதலையுறக் காத்துள்ள ஆன்மாக்களை ஏற்கின்றோம்.

பல்வேறு பிறவிகளை மேற்கொண்டு சிரசினிலே ஆன்மத்துகள்களை சிறை கொண்டுள்ள நிலைதனை உணர்ந்திடுங்கள். ஆசைகளே பற்றுகளாய் உருமாறி துணை அணுக்களின் ஈர்ப்பு விசையினைப் பெருக்குகின்றது, அதன் மூலமே ஆத்மக் கருத்துகள்களான பாதரச அணுத்துகள்களும் துணை அணுக்களினால் சிறைவைக்கப்படுகின்றன. ஒவ்வொரு ஆசைகளும் நிறைவுற்றல் மாத்திரமே துகள்கள் அனைத்தும் விடுதலை அடைய இயலும். பிறவிகள் பல கண்டால் மாத்திரமே இச்செயலும் நிறைவுறும். பிறவிகள் காண்பதற்கு புவிக்கோளானது அனுமதி வழங்கிடாத சூழலும் விரைந்து உருவாகும்.

புவியின் புணரமைப்பின் காரணமாக பிறப்பு இறப்பு எனும் சுழற்சியும் தடையுறும், ஒவ்வொரு ஆசைகளும் பூர்த்தியுற இயலாத சூழலில் ஆத்மக்கருக்களை யாமே முனைந்து விடுவிக்கின்றோம். தீட்சைளின் மூலம் திரைகள் விலகினால் யாம் ஆற்றிடும் பணியினையும் உணர்ந்திட இயலும். எமது பலகோடி ஆன்மத்துகள்கள் யாவும் பிளவுற்றுச் செயல்புரிகின்றன. எமது ஒவ்வொரு ஆன்மத்துகளினையும் ஒவ்வொரு மானுட சிரசினிலும் யாம் உட்செலுத்திடும் கலை அறிவோம். என்றுணர்க.

குருவான மகளாரின் ஆன்ம ஒளியிழைகளோடு இணைப்புற்றுள்ள ஆன்மாக்களை யாம் எளிதாய் ஊடுருவியே உட் சென்றிடுவோம். விடுதலை அடைந்துவிட்ட ஒவ்வொரு ஆன்மாக்களும் எமதாற்றலை உணர்ந்திடுவர். விடுதலை அடையக் காத்துள்ள ஆன்மாக்களும் சிரசாண்டிட முனைந்திடும் எமது ஆற்றலை

உணர்ந்திடுவர். துணை அணுக்களால் பிணைக்கப்பட்டுள்ள ஆன்மக்கருக்களை யாம் வெளிக்கொணர்ந்திடவே உதவிடுவோம். ஆசைகளும் பற்றுகளும் வெளியேறற்படல் வேண்டும். அமிலக் கழிவுகளும் நீக்கப்படல் வேண்டும். உயரிய இப்பணிதனையே யாம் ஏற்றுள்ளோம். கலிவட்ட அணுக்களைக் கடந்திட்ட அனைத்து ஆன்மத்துகள்களையும் யாம் விடுவித்தே அருளிடுவோம்.

முழுநிலவு உதித்திடும் முன்னர் சிரசினின்று ஆன்மாவானது விடுதலை அடைந்து ஈசனைக் கலப்புற்று பேரானந்த நிலையினை எய்திடவும் உதவிடுவோம். மீண்டும் சிரசினிலே அமர்ந்திடும் ஆன்மாவானது வீரியமாய்ச் செயல்புரியும். விடுபடாத கலிவட்டத் துகள்களையும் எளிதாய் விடுவித்திடும் மேலும் தமது நிர்ணயிக்கப்பட்ட இறுதிக் காலம்வரை இறைலயத்தினில் இன்புற்றே வாழ்ந்திருக்கும் என்றுணர்க.

### 3. ஆன்ம விடுதலைக்கு உயர் ஆன்மாக்கள் எவ்விதம் உதவிடுவர்?

ஞானத்தின் ஆலய ஜோதியினிலே உள்ளும் புறமுமாய் பல உயர் ஆன்மாக்கள் இணைந்துள்ளனர். கலியுலகப் போரினிலே உதவிகள் புரிந்திடவே காத்துள்ளனர். ஈசனின் பணிதனை யாம் ஏற்று நிகழ்த்திட, எமது பணியினை அகமும் புறமுமாய் பல ஆன்மாக்கள் ஏற்றுச் செயல்புரிகின்றன. எட்டாம் வட்டம் மலர்ச்சியுற உதவிடவே காத்துள்ள உயர் ஆன்மாக்களைப் போற்றியே துதித்திடல் வேண்டும். ஆறுமுக ஆசானின் அருளினைக் கொண்டு மலர்ச்சியுற்ற ஆறாம் வட்ட மலர்களும் ஏழாம் வட்ட மலர்களும் ஏற்றிட்ட உயர் ஆன்மாக்களே எட்டாம் வட்ட மலர்ச்சிக்கும் உதவிடுவர்.

ஆறுமுக ஆசானின் ஆற்றல்களாய் உதித்திட்ட உயர் ஆன்மாக்கள் பதினெட்டும், நவசித்தர்களும் ஆலயத்தினைக் காவல்காத்திடும் 101 சித்தர்களும் பல கூறுகளாய் பிளவு கொண்டு மானுட சிரசுகளை ஏற்றிடுவர். குருவான மகளார் உணர்ந்தே எடுத்துரைப்பர் ஆலய ஜோதியிலே ஒளியாய் கலப்புற்றுள்ள உயர் ஆன்மாக்கள்

குருவான மகளாரின் சிரசினை மின்காந்த இழைகள் எனும் ஒளியிழைகளின் ரூபத்தினிலே பற்றியே செயல்புரிவர்.

ஆன்ம விடுதலை எனும் மிக உயரிய நிகழ்வு நிகழ்ந்தேறிடும் தருணத்தில் விடுதலை அடையவுள்ள ஆன்மாக்களின் இருப்பிடத்தனை ஒளிரூபமாகவே சென்றடைவர். ஒளியின் வேகமும் வீரியமும் எத்தகையது என்பதனையும் உணர்த்திடுவர். உடலினிலே உயரிய உறுப்பான சிரசு எனப்படும் மூளைப்பகுதியினை உயர் ஆன்மா ஒன்று ஊடுருவி உட்செல்வதனை அனைவரும் உணர்ந்திடல் வேண்டும். மானுட ஆன்மாக்கள் விடுதலை அடைந்துவிட உடலினைவிட்டு வெளியேறி ஆலயஜோதியினை அடைந்து ஒளியிழைப் பாலம்தனைப் பின்பற்றி எமதாற்றலினால் ஈர்க்கப்பட்டு மற்றபிற ரிஷிகளின் துணை கொண்டு ஈச உலகம் சென்றடையும் அற்புத நிகழ்வு நிகழ்ந்தேறிடும்.

ஈச உலகம் எனப்படும் சூரிய மையத்தினை அடைந்துவிட்டால் பிறவிச் சுழற்சி என்பது பூர்த்தியுறும். எந்த ஒரு ஆன்மாவும் சதுர்யுக எல்லையினைக் கடந்து புவியினில் வாழ்ந்துவிட இயலாது. விடுதலைதனை ஏற்றால் மாத்திரமே சத்யயுகத்தினில் மலர்ச்சியுற்ற வாழ்வினை ஏற்றிடலாம். ஈச உலக தரிசனமும், ஆற்றல் கலப்புகளும் உணர்வு நிலைகளால் ஏற்கப்படல் வேண்டும். ஒரு நாழிகை நேரம்தனில் நிறைவுறும் ஈசக்கலப்பு என்பது ஆன்மாவிற்கு பேராற்றலைத் தொடர் செயலாய் நல்கிடும்.

ஏற்றிட்ட ஆன்மாக்களை யாம் மீண்டும் ஈர்த்தே ஆலய ஜோதியோடு கலப்புறச் செய்திடுவோம். விடுதலை கண்ட ஆன்மாக்கள் மகிழ்வுற்றே மீண்டும் தமது இருப்பிடம் நோக்கிப் பயணித்திடும். உடலினைப் பாதுகாத்திடும் உயர் ஆன்மாக்களுக்கு நன்றியுரைத்தே உவகை கொண்டிடும் ஆன்மாக்கள் உடலினை மீண்டும் அடைந்த பின்னர், உடலினை காத்திட உட்புகுந்த உயர் ஆன்மாக்கள் விடுபட்டு ஆலய ஜோதியிலே கலப்புறுவர்.

**கலியுலகினில் மாத்திரமே உருவாகும் முப்பரிமாண ஆற்றல் பரிமாற்றங்களை எவராலும் எளிதினில் உணர்ந்து விட இயலாது.**

**முழுநாம்பிக்கையும், சரணாகதமும் உயர் பலன்களை நல்கிடும் எவ்விதம் இச்செயலானது நிகழ்ந்தேறிட இயலும் எனில் கூடுவிட்டு கூடு பாய்ந்திடும் சித்துக்கலையின் மூலம் சாத்தியமாகும் என்றறிக.**

மறைபொருளான ஆன்மாவினை உணர்ந்துவிட்டால் அனைத்தும் சாத்தியமே. அனைத்தும் உணர்ந்திட்ட உயர் ஆன்மாக்கள் விண்ணுலக இயக்கம் நிகழ்ந்தேறிட தங்களது ஆற்றல்களை பயனுறுத்திடவே முனைந்திடுவர். சிரசினில் ஏற்றிடும் உயர் ஆன்மாவே இறுதி காலம் வரை இன்புற்று வாழ்ந்;திடவும் உதவிடுவர்.

### 4. இணைத்திடும் பாலமாம் எமது மகளாரான குருவின் நிலை யாது?

உயர் ஆன்மாக்களையும் விடுதலை அடைந்திடக் காத்துள்ள ஆன்மாக்களையும் ஒளியிழைகள் எனப்படும் நான்கு வகை கனிம ஆற்றல்களான பாதரசம், தங்கம், வெள்ளி மற்றும் தாமிரம் ஆகிய கனிம வளங்களைக் கொண்டு இணைந்திடும் இடைப்பாலமாக எமது மகளார் செயலாற்றுகின்றார். குருவாய் நிலைத்துவிட்டால் ஆன்மாக்களுக்கு முக்தி வழங்கிடல் வேண்டும். பல்வேறு கலைகளைக் கற்பித்திடும் குருமார்கள் உண்டு, எனினும் ஆன்ம விடுதலை எனும், முக்திக்கு வழிவகுப்பவரே உயரிய குருவாவார். ஒவ்வொரு கலியுலக எல்லையிலும் மகளாரைப் போன்றே ஓர் உயரிய குரு உதித்திடுவார் என்பது நியதியாகும்.

ஒவ்வொரு ஆன்மாக்களும் ஈச உலகம் சென்றடைய உதவிடும் ஆன்மாவே உயர்ந்த குருவாய் நிலைத்திட இயலும். வழித்தடத்தினை உணர்த்தி, பயணத்திற்கான உயர்ந்த எரிபொருள் என்கின்ற ஒளிப்பாலத்தினையும் வழங்கிடும் ஆன்மாவே உத்தம குருவாய் நிலைத்திட இயலும். கலி எல்லையில் உத்தம குரு எனும் நிலையினை ஏற்றிட வேண்டுமெனில் முதல் யுகத்தின் முதல் பிறவி முதல் பல்வேறு நிர்ணயங்களை மேற்கொண்டிடல் வேண்டும்.

பல்வேறு பரிசோதனைகளும் உண்டு, உயரிய பலனும் உண்டு. அவ்வகையில் சத்ய யுகத்தினிலே தனது முதல் பிறவிதனில், பாரத்வாஜர் எனப்படும் பரதவசி முனிவரின் மகனாய் உருக்கொண்டு கலியுலக எல்லைவரைப் பயணித்து அனைத்து மானுட ஆன்மாக்களையும் விடுவிப்பேன் என்றே சபதம் மேற்கொண்டு அதற்கான திட்டங்கள் பலவற்றையும் வகுத்தே செயல்புரிந்திட்ட மகளார் இத்தருணத்தில் தனது பணியினை நிறைவு செய்து விண்ணுல வாசியாக நிலைத்திடவே முனைகின்றார்.

உலகம் உய்வுறுதல் எனும் உயரிய பணியானது சாமன்ய மானுடராய் நிறைவேற்றப்பட இயலாது என்றுணர்க. அனைத்து உயர் ஆன்மாக்களின் ஆசிகளையும் வரங்களாகப் பெற்றே இயங்கிடும் திறன் கொண்டிருக்க வேண்டும். தனித்துப் போரிடுவது கலியின் எல்லையில் சாத்திய மற்ற செயல் என்றே எண்ணி உள்ளும் புறமும் பல ஆன்மாக்களின் துணையினை ஏற்றே மகளார் செயல்புரிகின்றார். பணிவு நிலை உயர்ந்தால் மாத்திரமே தனது நிலையினைக் காட்டிலும் தாழ்ந்துள்ள ஆன்மாக்களையும் பணிவுடன் ஏற்றிட இயலும்.

அன்பும், கருணையும், பண்பும், பணிவும் உயர்நிலைகள் சித்திக்க உதவிடும். கலியினிலே இத்தகைய குருவோடு இணைந்துவிட ஒவ்வொரு ஆன்மாவும் சில பிறவிகளிலேனும் முயன்றிடல் வேண்டும். எமது மகளான குருவினோடு முற்பிறவிகளிலே இணைந்து பணிபுரிந்திட்ட ஆன்மாக்களே இப்பிறவியிலும் இணைந்திட இயலும், ஆன்ம விடுதலையும் பெற்றிட இயலும் என்றுணர்க.

மலரக் காத்துள்ள ஆன்மாக்களே! ஆழ்ந்து சிந்தனை புரியுங்கள். சுயம் என்றே உணர்த்தப்படும் ஆன்மாவின் ஆற்றல்களை ஏற்றிடுங்கள் ஆழ்ந்த சிந்தனை என்பது சுயத்தினை அறிவதாகவே அமைந்துவிட்டால் ஆன்மா விடுதலை அடைந்துவிடும். பிறவியின் நோக்கத்தினை உணர்ந்து, பிறவா வரம் பெற்று வாழுகின்ற காலம் வரைப் புவியினையும் ஈசனையும் உணர்ந்து பெரும் பேறு பெற்றவராய் வாழ்ந்திடக் கடவது.

ஈசனின் தூதுவனாய் செயல்புரியும் அகத்தீசனை உணர்ந்து ஏற்றிடுங்கள். குருவின் திருவருளைப் பணிந்து ஆன்ம விடுதலை கண்டு உத்தம நிலைகளை எய்திடுங்கள்.

**வாழ்த்துகின்றோம்.**

Gnanalayam